# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு – 2024

9 - ஆம் வகுப்பு

நேரம் : 3.00 மணி

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள் :100

I கீழ்க்கண்ட அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 X 1 = 14

1. சொற்களைப் படங்கள் மூலம் உணர்த்தும் குறியீட்டு முறையை .................... என்கிறோம்.
   அ) அழகெழுத்து ஆ) சித்திர எழுத்து இ) கருத்து எழுத்து ஈ) மண்ணடுக்காய்வு
2. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துமுறை யாது?
   அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ் – பிராமி ஈ) கிரந்தம்
3. சரியான கூற்றைக் கண்டுபிடிக்கவும்.
   அ) 1640 இல் பிரெஞ்சுக்காரர்கள் ஜாவாவையும் சுமத்ராவையும் கைப்பற்றினர்.
   ஆ) மலாக்காவைக் கைப்பற்றியதின் மூலம் ஆங்கிலக் குடியேற்றங்களைக் கைப்பற்றும் பணியை டச்சுக்காரர் தொடங்கினர்.
   இ) காங்கோ ஆற்றின் வடிநிலத் தீரத்தோடு தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் பேசித் தீர்ப்பதற்காகவே பெர்லின் மாநாடு கூடியது.
   ஈ) சுல்தான் ஜான்ஜிபாரின் பகுதிகள் பிரான்சு மற்றும் ஜெர்மனியின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. அ) அ சரி ஆ) அ மற்றும் ஆ சரி இ) இ சரி ஈ) ஈ சரி
4. தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
   அ) எலியாஸ் ஹோவே ஆ) எலி-விட்னி இ) சாமுவேல் கிராம்டன் ஈ) ஹம்ப்ரி டேவி
5. .............. ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்.
   அ) துள்ளல் ஆ) வண்டல் விசிறி இ) டெல்டா ஈ) மலை இடுக்கு
6. புவியின் குளிர்ச்சியான பல்லுயிர்த் தொகுதி
   அ) தூந்திரா ஆ) டைகா இ) பாலைவனம் ஈ) பெருங்கடல்கள்
7. மக்கள்தொகை பற்றி புள்ளியியல் விவரக் கல்வி ................ ஆகும்.
   அ) மக்கள் தொகையியல் ஆ) புற வடிவமைப்பியல்
   இ) சொல் பிறப்பியல் ஈ) நிலநடுக்க வரைவியல்
8. தீவிபத்து ஏற்படும்போது நீங்கள் அழைக்கும் எண்
   அ) 114 ஆ) 112 இ) 115 ஈ) 118
9. ஆபிரகாம் லிங்கன் .................. நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.
   அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து இ) சோவியத் ரஷ்யா ஈ) இந்தியா
10. ஐ.நா. சபையின்படி .............. வயது நிறை பெறாதோர் குழந்தை ஆவார்.
    அ) 12 ஆ) 14 இ) 16 ஈ) 18
11. 73 மற்றும் 74 வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன
    அ) 1992 ஆ) 1995 இ) 1997 ஈ) 1990
12. இந்தியாவில் அதிகபட்ச சூரிய ஆற்றல் உற்பத்தியைச் செய்யும் மாநிலம்
    அ) தமிழ்நாடு ஆ) மேற்கு வங்காளம் இ) கேரளா ஈ) ஆந்திரப் பிரதேசம்
13. மூன்றாம் துறையில் அடங்குவது
    அ) போக்குவரத்து ஆ) காப்பீடு இ) வங்கியல் ஈ) அனைத்தும்
14. வெளிகுடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம்
    அ) இராமநாதபுரம் ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) வேலூர்

II எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
28வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். 10 X 2 = 20

15. வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழக மக்களின் வாழ்வில் கால்நடை வளர்த்தல் ஏற்படுத்திய தாக்கம் பற்றி குறிப்பு வரைக.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

G. SIVANANDHA, M.A.B.Ed,
BT. ASST [SOCIAL SCIENCE].
GOVT. HIGH. SCHOOL,
SANDANAPALLI @ Erudukotta
KELAMANGALAM (BLOCK)
KRISHNAGIRI (DT).
PH:9003373506

16. கான்ஸ்டான்டிநோபிளின் முக்கிய பங்களிப்பை சுட்டிக் காட்டுக.
17. நகரமயமாதலுக்கு உதவிய காரணிகள் யாவை?
18. பிரான்சின் மூன்று வர்க்கங்களின் அமைப்பு (Three Estates) பற்றி எழுதுக.
19. புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
20. காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
21. நீரியல் சுழற்சி என்றால் என்ன?
22. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.
23. அடிப்படை உரிமைகள் யாவை?
24. சாலை சமிக்ஞையில் (Road signal) எந்த நிறம் 'நில்' என்பதை உணர்த்துகிறது?
25. சூரிய சக்தி என்றால் என்ன?
26. உணவுப்பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும், உணவல்லாத பயிர்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகளும் எழுதுக.
27. இடம்பெயர்தலுக்கான காரணங்களைப் பட்டியலிடுக.
28. நிலவரைபடத்தின் கூறுகள் யாவை?

**III எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 10 X 5 = 50**
**42 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

29. 1) ....... என்பது ஜப்பானின் முந்தையப் பெயர் ஆகும்.
2) கி.பி. 1453 ல் கான்ஸ்டாண்டிநோபிளை .............. கைப்பற்றினார்.
3) பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு ...................
4) உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை என அழைக்கப்படுபவர் ...................
5) தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது ............... பருவ மழையாகும்.
30. வேறுபடுத்துக. 1) வானிலை மற்றும் காலநிலை 2) முதல்நிலைத் தொழில் மற்றும் இரண்டாம் நிலைத்தொழில்
1) காரணம் கூறுக : உயிர்க்கோளம் ஒரு நிலையான சூழல் மண்டலத்தைக் கொண்டுள்ளது.
31. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?
32. புவியியல்சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆராய்க.
33. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கத்தை விவாதிக்கவும்.
34. புவி அமைப்பை விவரி.
35. சூழ்நிலை மண்டலத்தின் செயல்பாடுகளை எழுதுக.
36. தீவிபத்தின்போது என்ன செய்யவேண்டும் என்பதை பற்றி குறிப்பு எழுதுக.
37. ஒற்றையாட்சி முறையின் நிறைகளை விவரி.
38. சாலை பாதுகாப்பு விதிகளைப் பற்றி விவரி.
39. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரி.
40. இடப்பெயர்வின் முறைகளைப் பற்றி விரிவாக எழுதுக.
41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1780 முதல் 1800 வரையிலான ஏதேனும் ஐந்து உலக வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிப்பிடுக.
42. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
1) காஷ்மீர் 2) டில்லி 3) வங்காளம் 4) அகமதாபாத் 5) மதுரை

**IV கீழ்க்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி. 2 X 8 = 16**

43. அ) சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் எழுதுக.
*(அல்லது)* ஆ) இங்கிலாந்தின் தொழிற்புரட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?
44. அ) கீழ்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
1) ஆசியா 2) வட அமெரிக்கா 3) தென் பெருங்கடல் 4) பென்குலா நீரோட்டம் 5) வளைகுடா நீரோட்டம்
6) சகாரா பாலைவனம் 7) எகிப்து நாகரீகம் 8) இமயமலைத்தொடர் *(அல்லது)*
ஆ) 1) ஐரோப்பா 2) அலாஸ்கா நீரோட்டம் 3) ஆர்டிக் பெருங்கடல் 4) சிந்து நாகரிகம் 5) ஜப்பான்
6) பசிபிக் நெருப்பு வளையம் 7) மேற்கு கிரீன்லாந்து 8) மங்கோலியா



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com